



ஓலை 141| ஓசை 264| செப்டம்பர் 2025

# அகர முதல இலக்கியப் பேரவை



‘சொல்லின் செல்வர்’

## இரா.பி.சேதுப்பிள்ளை

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

பொருள்கருவி காலம் வினையிடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்.

## பொருள்

ஒரு செயலைச் செய்யத் தொடங்கும்போது தனக்கும் தன் எதிரிக்கும் இருக்கும் செல்வம், சாதனங்கள், ஏற்ற காலம், செயல்திறம், பொருத்தமான இடம் ஆகிய ஐந்தையும் சந்தேகத்திற்கு இடம் இல்லாமல் சிந்தித்துச் செய்க.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.


**அகர முதல இலக்கியப் பேரவை**


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

பிறன்மனை புகாமை அறமெனத் தகும்!

பாவகை : கலித்துறை

ஆற்றின் தேமல் பேர்மணல் திட்டே, அதுபோன்றே
ஆற்று நீரின் நீர்குமிழ் தேமல் எனலாமே;
போற்றும் பண்பில் கற்பினை நீக்கி நிலமெங்கும்
மாற்றான் தன்னின் தோலுடல் நாடல் மனத்தேமல்!




கார்மே கத்தின் தேமலே நீரின் திவலைத்தான்;
பார்வி ரிந்த வானிலே தேமல் ஒளிமீன்கள்;
சீர்மை கெட்டு நாணமே அற்றோர் மனைநாடல்
பேர்பு கழ்தான் கெட்டுமே மானம் அதுபோகும்!

கோடிக் கோடிச் செல்வமோ வைத்தே இருந்துந்தான்
நாடி ஏழை தன்னினு ழைப்பைக் களவாடல்
தேடிப் போய்தான் பிறன்மனை நாடல் செயலாகும்;
ஓடி எங்கோ சென்றுமே கொல்லும் அறந்தானே!




எல்லார் மனையாள் தன்னின் தங்கை எனக்கொண்டே
பொல்லா எண்ணம் தீய்த்துமே மற்றோர் மனைத்தீண்டா
நல்ல எண்ணம் ஏற்றுமே வாழ்தல் அறமாகும்;
எல்லை கொண்டு இன்பமும் துய்த்தால் அறம்காக்கும்!

இலக்கணக் குறிப்பு:
கலித்துறைப் பாக்களில் தேமா, தேமா, கூவிளம், தேமா. புளிமாங்காய்ச் சீர்களாகப் பெரும்பான்மையாகப் பெற்று, அடி தோறும் வரும். நான்கடிகள் ஒரெதுகைப் பெற்று, பாட்டின் ஈற்றுச் சீரின் ஈற்றசை ஏகாரத்தில் முடியும், ஏகாரத்தில் வராமலும் முடியலாம் பொழிப்பு மோனைப் பார்க்கத் தேவையில்லை.

## பாவகை : பஃறொடைவெண்பா

மனிதன் அருளுடன் மங்காமல் வாழ
இனிய விடியலால் இன்னல் அகற்ற
தனித்தே தமிழன் தடம்பதித்த பண்பே
இனியர் அனைவரும் இன்பம் அடைய
குனிவின்றி நாளுமே குன்றல் ஒதுக்கி
சனித்த உயிர்களைச் சார்புடன் காக்கும்
நனிசிறந்த பண்டைய நாகரிகம் காட்டும்
மனிதநேயப் பண்டிகை மாண்பு.



கவிஞர் செ. கலைவாணி

# காலநதி

காலநதி பாய்ந்தோடும் கடமை என்றே ;
கட்டுப்ப டுத்திடுவார் யாரும் உண்டோ !
கால நதிக்கில்லை முதலும் முடிவும் ;
நடுவில் யாவரும் வந்து போதல் மட்டுமே !



காலம் சக்கரம் பின்னோக்கி நகராது ;
முன்னோக்கி மட்டும் செல்லும் !
காலத்தின் கரையினில்
உயிர்கள் இளைப்பாறலாம் ;
நிரந்தர குடியிருப்புக்கள் இல்லை !

கால வெள்ளத்தில் உலக நாகரீகங்களும்
அரசுகளும் தோன்றும் மறையும் !
பால்வீதியில் தாளகதியில் நடக்கும் ;
கோள்களை உருட்டி விளையாடும் !

மனிதரின் வரலாற்றை அடித்துத் திருத்தும் ;
சில சித்தாந்தங்கள் காணாமல் போகும் !
கொடுங்கோலர் மாளிகையை இடிக்கும் ;
அறத்தாருக்கு கோவில் எழுப்பும் !

காலத்தின் சட்டங்கள் புரிவதில்லை ;
மனிதரின் நீதி வரம்பில் அடங்குவதில்லை !
காலம் என்பது ஒரு மாயம்
மனிதனை ஆட்டுவிக்கும்
இறைமையின் வெளிப்பாடு !

இந்த மாயநதியின் ஒரு கரையில் மனிதன் ;
இன்னொரு கரையில் இறைவன் !
இறைவன் எங்கிருக்கின்றான் ? ; முடிந்தால்
காலம் கடந்து சென்று கண்டு பிடியுங்களேன் !

கவிஞர் ஆ.சி.கந்தன், திருவொற்றியூர்(சென்னை)

பாவகை : குறள் வெண்பா

### 1. ஆறறிவால் நெறிமுறை ஆள்

ஆறாம் அறிவும் அலையாய் எழுந்திட
சீறாது துன்பச் சிறை

பகுத்தறியும் பண்புதான் பண்படுத்தும் வாழ்வில்
மிகுதியாய் ஏற்று மிளிர்

அறிவை செறிவுடன் ஆற்றுப் படுத்த
நெறிமுறை போற்றும் நிறை

சிந்தனை தூண்டில் சிறப்பாய் இருந்திட
முந்திவிழும் வெற்றி முனைந்து

உலகில் மனிதர் உயர்ந்த பிறப்பே
அலகிலே ஆறறிவாம் ஆம்



### 2) ஆணவம் தன்னை அகற்று!

செருக்கை அணிந்தால் சிறைபடும் யாவும்
செருப்பாய் உதற சிறப்பு

அணியல்ல ஆணவம் ஆற்றலில் பூக்கும்
பிணிதான் அறிவாய் பிழை

தூக்கியே கொண்டாடும் துன்பச் செருக்கினை
போக்கிட இன்பம் புலர்ந்து

கண்கள் மறைத்திடும் கர்வ தலைக்கனம்
மண்ணில் விழுந்திடும் மாய்ந்து

மதிப்பை மிதித்தால் மலருமா மாண்பு
மதியும் கெடுமே மடிந்து

### 3) இயலிசை நாடகம்போல் ஏது?

மனத்தின் வலியை மறந்திடச் செய்யும்
கனங்குறைக்கும் இன்னிசை காற்று

அழுத்தம் குறைத்தே அழகினைச் சேர்க்கும்
நழுவா இயலிசை நாண்

தாக்கம் அதனை தகவாய் புகுத்திடும்
ஆக்கமாய் நாடகம் ஆம்

காற்றதன் கைகளும் கண்ணீர் துடைத்திடும்
நூற்றும் இசையாய் நுழைந்து

இயங்கிடும் யாவிலும் இன்பம் பொழிய
இயலிசை நாடகம்போல் ஏது?

கவிஞர் பூர்ணிமா சங்கர்

# போர்க்களத்தில் புதையும் உயிரெழுத்தென



வானமெங்கும் பறக்கும்
வானத்தை அளக்கும்
வாகனங்களை அணிவகுக்கிறீர்கள்.
எரிவாயு உருளைகள் எங்கும் நிறைந்திருக்க
மணல் மூடைகளும்
பதுங்கு குழிகளுமென
பிதுங்கிவழிகின்றன.
கவச உடைகளும் கனரக வாகனங்களுமென
விரைகையில்
முன்னறிவிப்பின்றி
பேருந்து நிறுத்தமும்
அங்காடி அடைப்பும்
அச்சுறுத்தலை அதிகரிக்கின்றன.
உங்களின் வசதிகளை விடாமல்
குளுமையில் இருந்தபடி
ஆணையிடுகிறீர்கள்.
எதிரியை ஒழிப்பதில்
ஆவேசம் காட்டி வெளியிடும்
அறிக்கைகளில் மனிதத்தை
அடக்கிவைக்கிறீர்கள்
உங்களது கண்ணசைவில்
ரவைகளைத் துப்பவும்
ஏவுகணைகள் பாயவும்
புதைத்தவை வெடிக்கவும்
காத்திருக்கின்றன அடிமைகள்.
அதிகார வர்க்கம்
எப்போதும் போல வலம் வர
நகர முடியாத நசுக்கலில்
அப்பாவிகளான நாங்கள்
பலியாவது யாருக்காக.
நாடுகளை அழிப்பதும்
நாடுகளைப் பகைப்பதும்
எங்களின் வாழ்வை
என்ன செய்துவிடும்..
தனி மனிதப் பழிவாங்கலின் விசத்தை
தவித்திருக்கும் எங்களின் மீதா தெளிப்பது?
அதிகாரத் திமிரில் அப்பாவிகளின் மீதான
அரசியல் விளையாட்டை
எப்போது நிறுத்தப் போகிறீர்கள்?
உணவைத் தேடியலைந்தும்
உறைவிடத்தை இழந்து தவித்தும்
ஆடையற்று நிர்வாணமாக்கி
அலையவிடும் யுத்தத்தில்
வெற்றியோ தோல்வியோ சுடுகாட்டில் தானா
கொண்டாடப் போகிறீர்கள்?.

கவிஞர் இளையவன் சிவா

# அரவணைத்து மகிழ்ந்திடுவாயே



உன்னோடு வாழாத
வாழ்வென்ன வாழ்வு
கனவோடு காத்திருந்தேன்
கனிவாகியே வந்தாய்

நித்திரையில் நிம்மதி
நிதமும் உன்னினைவில்
உள்ளத்தின் ஒளியாய்
உணர்வினில் மிளிர்ந்தவளே

எண்ணங்கள் சிறகடிக்கும்
ஏந்திழையின் பார்வையிலே
ஆனந்தப் பூங்காற்றாய்
ஆரத்தழுவிச் செல்கிறாயே

வாசமுல்லையே வஞ்சியுன்
வனப்பும் மெருகேறுதே
தகதகக்கும் மேனியும்
தள்ளாடும் நாணியே

ஒன்றானாய் என்னுள்ளே
ஒருபோதும் மறவேனே
உயிரின் சுவாசமே
உறவான நேசமே

நளினத்தில் நாட்டியமாடும்
நங்கையின் தேகமே
நாளும் தொடரும்
நமது பந்தமே

உன்னோடு வாழாத
வாழ்வென்ன வாழ்வு
காரிகையின் நினைவுகளில்
காதலது இனித்திடுமே

வாழ்க்கை சொர்க்கமாகிட
வரவும் வசந்தமாகிடுமே
இதழ்களில் தேனமுதம்
இளமையின் ரீங்காரம்

அன்பான ஆரணங்கே
அரவணைத்து மகிழ்ந்திடுவாயே.

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# பொழுது கண்டு இரங்கல்

அதிகாரம் : 123

மதிமயக்கும் மாலையே
நீ மாலைப்பொழுதேயல்ல.
அன்புக்காதலரை பிரிந்தோரின்
உயிர்குடிக்கும் வேலாமே.

ஏ முன்னிரவுமாலைப்பொழுதே
ஏன் ஒளியிழந்தாய்.
என்னவன்போல் உன்னவனும்
இரக்கமற்றவன் ஆனானோ?

அவனோடு இணைந்திருக்க
மாலை எனைநெருக்கியது.
தனித்து தவிக்கையில்
வாட்டித் துன்புறுத்துகிறதே.

என்னவன் இல்லாப்பொழுதில்
வரும் இம்மாலைநேரம்.
கொலைக்களக் கொலைஞன்போல்
எனைநோக்கிப் பாய்கிறதே.

காலைக்கு நான்செய்த
நன்மை என்னவென்றும்.
மாலைக்குசெய்த தீமைதான்
என்னவென்றும் அறியேனே.

என்னவனுடன் இருக்கையில்
இம்மாலைப் பொழுதெனக்கு.
இத்துணைத்துன்பந் தருமென்று
ஒருபோதும் அறிந்ததில்லையே.



என்னவனோடு எனக்கான
காதல்நோய் காலையரும்பாகி.
பகலில் மொட்டாகி
மாலையில் மலர்கிறதே.

அவனோடு இருக்கையில்
இனித்த குழலோசை.
அவனில்லாபொழுது நெருப்பாய்சுட்டு
கொல்லும் கூராயுதமாயிற்றே.

மாலைப்பொழுதின் மயக்கத்தில்
நான்மட்டுமன்றி ஊரில்.
காதல்மனங்கொண்ட மாந்தரெல்லாம்
துன்பத்தில் உழல்கின்றனரே.

பொருளீட்டவேண்டி எனைப்பிரிந்த
என்னவனை நினைந்து.
என்னுயிர் இம்மாலைப்பொழுதில்
மயங்கிச் சாய்கின்றதே.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# பரமசிவம் மங்கை

ஒத்தப் புள்ளைய பெத்தா
உறியில சோறும்
ரெண்டு புள்ளைய பெத்தா
நடுத்தெருவுல சோறும்னு
நம்மப் பெரியவங்க
எதுக்குச் சொன்னாங்க தெரியல.

பரமசிவம் மங்கைக்கு
ரெண்டு புள்ளைங்க
ஆனாலும் சோறு
நடுந்தெருவுல இல்ல.

ஓஹோன்னு இல்லாட்டியும்
பெத்தவங்கள
நல்லாவே பாத்துக்கிறான்
பெரியவன்.

பெரியவனுக்கு
ஆண்வாரிசில்ல ரெண்டுமே
பொம்பள புள்ளைங்க
பாசம் தலவிரிச்சாடும்
பெரியவன் வீட்ல.

பெரியவன்
அத்தமகள கட்டிக்கிட்டான்
படிச்சிருந்தும்
கர்வமில்லாதவ பெரியமருமக
சின்னவனுக்கு
கட்டினது மங்கை வழி
தூரத்து சொந்தம்.

சின்னவனுக்கு
மூத்தவன் பையன்
அடுத்து ரெண்டும் பொம்பள புள்ளைங்க
ரெண்டு வீட்டுக்கும் சேர்த்து
ஒரே ஆண்வாரிசு
சின்னவன் மகன் தான்.



பேரப்புள்ள மேல
பரமசிவத்துக்கு கொள்ளப் பிரியம்
பெரியவன் என்னா பார்த்தாலும்
சின்னவன் மேலயும்
அவன் புள்ளைங்க மேலயும் தான்
பரமசிவத்துக்கு நெனப்பும்
பாசமும்.


மங்கைக்கு பெரியவன் மேல
அளவுகடந்த பாசம்
பெரியவனுக்கும்
அம்மான்னா அம்புட்டு பிரியம்.

பெரியவங்க அந்தக் காலத்துல
எதையும் சும்மாச் சொல்லல
தாய்க்கு தலப்புள்ளன்னும்
தகப்பனுக்கு கடைசிபுள்ளன்னும்
சரியாத்தானிருக்கு
பரமசிவத்துக்கும் மங்கைக்கும்.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# காத்திருப்பு

உன் வருகைக்காக
என் காத்திருப்பு என்பது
மாரி கழிந்து
கோடை வரும்
கால எல்லை போல்
இரவு மறைந்து
பகல் பிறந்திடும்
நாள் நீட்சி போல்
வான் நிரம்ப விண்மீன்கள்
என்றாவது ஓர் நாள்
விழாக்கோலமிடுவது போல்
சூரிய கிரகணம் போய்
சந்திரகிரகணம் வரும்
கால அளவு போல்
நெடுநாள் காத்திருப்பு!



கவிஞர் ஸஞ்ஸீதா முஜீப் ரஹ்மான், புல்மோட்டை (இலங்கை)

# தோல்வியை ரசி வெற்றியை ருசி

தோல்வியை ரசித்தே துவளாத உள்ளமாய்
வெற்றியை ரசித்தே வெல்வாய் வாழ்விலே
திரண்ட முயற்சி திரட்சி கனியாய்
உரமும் ஊட்டி உள்ளத்தை நிறைக்குமே

வளங்கள் கிடைக்கும் வீரியமான விதையாய்
களமும் அமைத்தால் காணும் வெற்றியே
தோல்வியைக் கண்டு துவண்டு போகாமல்
வெல்லும் விதமாய் வெற்றியின் சிந்தையே



ரசிக்கும் பண்பும் ருசிக்கும் சிந்தை
புசிக்கும் நலனாய் புன்னகை புரியுமே
கடமையில் உயர்ந்தால் கண்ணிய வளமாய்
திடமான வாழ்வைத் திருப்பித் தருமே

வாழ்வில் தாழ்வுகள் வாசனை திரவியமாய்
மணக்காமல் வந்தே மகிழ்வைத் திரட்டுமே
சிறப்புகள் சேர்க்குமே சிற்பமான நினைவும்
மறக்காத களமாய் மனதில் தொடருமே

வளங்கள் பெருக்கும் வசதியின் உறவும்
தளமாய் அமைந்து தன்னிறைவுத் தந்திடுமே
குடும்பம் சிறக்க குழுமியே வேலையை
தொடுத்த உணர்வாய் தொடர்ந்தே செய்வோமே

சோம்பல் கொடுக்கும் சொகுசு பொருளும்
தம்மில் உயராது தன்னிலை கெடுக்குமே
உறவுகள் கூடும் உயர்ந்த இடமாய்
பிறவியில் காணாத பெரும்பண்பின் மனமே

கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

# நல்லவை விதை

சிப்பிக்குள் முத்தாய் தங்கிடு
சிங்காரத் தமிழினில் கலந்திடு
சிலுவைகள் சுமக்கவும் தயங்காதே
சிம்ம சொப்பனமாய் விலக்கிடு.

செல்வங்கள் சேர்ப்போம் புறப்படு
செவ்வாய் கிரகமும் தொட்டிடு.
நந்தவனப் பூக்களாய் மலர்ந்திடு
நறுமணம் வீசியே திகழ்ந்திடு.

உன்னதங்களை உயர்வாய் செய்திடு
உறுதியாக படையோடு செயல்படு.
வண்ணங்கள் சிதறட்டும் மனதோடு
வளரட்டும் எண்ணங்கள் முயற்சியோடு.

உதிக்கும் ஆதவனைக் கண்டிடு
உரமாய் உடலை உருவாக்கிடு.
வல்லமை மிக்க நற்செயல்களை
வாழ்நாள் முழுவதும் செய்திடு.

ஒன்றாய் இருக்க் கற்றிடு
ஒற்றுமையே ஓங்கச் செய்திடு.
இமயமலை சிகரங்கள் தொட்டிடு
இல்லை எனாதே வாழ்ந்திடு.

வெற்றிக் கொடிகள் கட்டிடு
வெண்மை மனம் கொண்டிடு.
வரலாற்றில் இடம் பிடித்திடு
வசைபாடா வாழ்வு தேர்ந்திடு.



நிழல்கள் கொஞ்சம் இகழ்ந்திடு
நிகழ்த்து உண்மையான மாற்றங்களை.
அந்தி மழையில் நனைந்திடு
அல்லும் பகலும் சிந்தித்திடு.

தமிழைத் தினமும் போற்றிடு
தானம் தர்மம் செய்திடு.
நல்லவைகளை எங்கும் விதைத்திடு
நானிலம் சிறக்கப் பாடுபடு.

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# இயற்கையுடன் இணை

குழைக்கிறது மேகம்
விடியும் காலையை பார்த்து
வழிக்கிறது வெட்கம்
உதிக்கும் சூரியனை பார்த்து
சிரிக்கிறது நிலவு
உருகும் பனியினை பார்த்து
சிலிர்கிறது தேகம்
உரசும் காற்றினை நினைத்து
நுகருகிறது மனம்
மழையின் மண்வாசத்தை நினைத்து
மகிழ்கிறது எண்ணம்
பிடித்தவரை நினைத்து பார்த்து
மயக்கம் கொள்கிறது உள்ளம்
இயற்கையுடன் கவிதை
ஒன்றிணையும் தருணம்
இதயத்தை திறந்து வைத்து
இயற்கையுடன் இணைந்துவிடுங்கள்
வாழ்க்கை அழகாககும்.



கவிஞர் க. பூமணி, சென்னை

நீ நீயாய் இரு!
நிலவிலும் களங்கம் தேடும்
நெஞ்சங்கள் வாழும் உலகமிது.
வாழ்ந்தாலும் ஏசும்
தாழ்ந்தாலும் ஏசும்.
உன் ஒவ்வொரு அசைவுக்கும்
பழி சொல்லிச் செல்லும்
பாவம் வழி சொல்லத் தெரியாது.
நிஜங்களை தேடித் தேடி
நெஞ்சுரம் இழக்காதே
நீ நீயாய் இரு!



கவிஞர் ஸ்ரீவள்ளி, கோவை

# எவரும் அறியாமல்

எவரும் அறியாமல்
ஒரு நேரம்; வரட்டும்!

காத்திருந்தேன்;
அந்நேரம் வாய்த்தவுடன்;
காட்சியாய்
அதுவும் கூட நின்றது;
எனக்குத் தெரிந்தது.



எவரும் அறியாமல்
ஒரு காரியம் செய்ய முனைந்தேன்;
அந்நேரம் அது வந்து ஆட்சி செய்தது

எவரும் பாராமல் ஒரு வினையாற்ற முயல;
அது வந்து சாட்சியாய் நின்றது.

எவரும் கேளாமல் ஒரு வார்த்தை சொல்ல;
அது என்னை விழுங்கியது.

கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# நிதானத்தின் அவசியம்

சிந்தித்து செயல்படுவதை விட
இங்கு பேராயுதம் ஒன்று இல்லை
போர்க்களத்தின் வெற்றி
அச்சம் தவிர்ப்பதே ஆக்கம்
செய்யும் முன் செயல்பாடுகளை
அறிந்து செய்
எதையும் குறைவாக நினைத்து விடாதே
அது உன்னை குறையாக்கிவிடும்
வலிகளின் விருட்சமே
வாழ்க்கையின் வெளிச்சம்.



கவிஞர் ம. செல்லமுத்து, பெரம்பலூர் மாவட்டம்

# வாழ்க்கைத் துணை நலம்



இல்லற அணிகலனாம் நற்குணங்களோடு
எக்கனமும் பொருளாதார சிக்கனத்தாளே
நல்லறம் நடாத்தும் தனியழகு நிறைந்த துணைவியே

சிறந்த நற்குணங்கள் நயனோடு
மனையாளிடம் இல்லையெனில்
நிரந்தரமாய் வாழ்வில் பயனிலையே

நற்குணம் மனையாளிடமே
மிக்கிருப்பின் சற்குணமும் இல்லில் நிறைந்தது
தினையளவும் குணமின்றேல் சகலமும் குறைந்தது

கற்பென்னும் மனவுறுதியை
மனையாள் பெற்றாலெனின்
கற்பகத் தருவாய் வலம் வருவான் துணைவனே

பிற தெய்வம் தொழாது
கணவனையே தெய்வமாகத் தொழுபவளே
சிறந்த வான் மழையை மண்ணில் பொழிய வைப்பளே

கற்புநெறி தவறாமல் தன்னையும் கணவனையும் காப்பவள்
அற்புதமான புகழோடு கடமை தவறாத கட்டுக் கோப்பவளே

இல்லத்தில் சிறை வைத்துக் காத்தல் மனையாளுக்கு அழகல்ல
உள்ள ஒழுக்கமே காவல் காத்தல் பேரழகு

மணாளனை வணங்கிப் பேரன்பை பெறும் மகளிர்
விண்ணுலக தேவர்களிடம் அடைவர் சிறப்பு

கற்பினால் ஒருமிக்கா மனையாளைப் பெற்றோன்
செறுநரிடம் பெருமிதம் இழந்து பேரிடர் உற்றோனே

நற்குண மங்கையே இல்வாழ்வின் மங்கலம்
நன்மக்கட்பேறே வாழ்க்கையில் அடுத்த அங்குலம்

கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்

# உன்னை நான் சுமக்கின்றேன்

முதியோர் இல்லத்திலும்
உன்னை நான் சுமக்கின்றேன்
என் இதயத்தில்.



நான் இங்கு இருப்பதுதான்
உனக்கும் உன் மனைவிக்கும்
மகிழ்ச்சி என்றால்

நான் இங்கேயே இருந்தும்
இறந்தும் விடுகிறேன்.

முதியோர் இல்லத்தில் தந்தை
அந்த இறைவனிடம் வேண்டுதல்

என் நிலை நாளை உனக்கும்
உன் மனைவிக்கும்
வந்துவிட கூடாது என்று!

கவிஞர் இரா. சங்கர், ஈரோடு

# விழியின் விதிமீறல்

அவள் விழிகளின்
வேகத்தில் எந்தன்
காதல் விதிமீறலாய்

காதலின் பாதையில்
கவிதைகளின் பயணம்
எழுத்துக்களின் நெரிசலாய்



அவளின் காதல்
பார்வையில் நிழலாய்
எந்தன் நிஜங்கள்

காதல் வேகத்தில்
எனது கவிதையின்
மொழிகள் ஊமையாய்

அவளால் தொலைகிறேன்
தினந்தோறும்
காதல் நினைவுகளாய்

வீழ்ந்து கிடக்கிறேன்
அவள் காதல் சிறையில்
அவள் விழிகளின் விதிமீறலால்

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# தீர்ந்த தீர்ப்புகள்

அவளிடம் ஒரு முறையாவது
கேட்டுவிட வேண்டுமென்ற
ஏக்கத்தைத் தடுக்க முடியவில்லை!

குழாய் அடியில்
கூட்டத்தோடு தண்ணீர் பிடித்துக் கொண்டிருக்கும்போது
அவளது முறை வந்த பின்பும்
கரிசனத்தோடு விட்டுக் கொடுத்து
காதலோடு காத்திருந்தாள்!



காக்காய் கடி கடித்த
கடலை மிட்டாயை
பக்கத்து வீட்டு சிறுமியிடம்
பரிசாய்க் கொடுத்து
கொஞ்சி முத்தமிட்டு
தட்டாமாலை சுற்றிச் சிரித்தாள்!

ஊரோரப் புளிய மரம்
காக்கா குஞ்சு விளையாட்டில்
சிறுவரோடு சேர்ந்து விளையாட
வீம்புக்கு அழைத்தாள்!

மை தீட்டிய விழிகளால்
பொய்க்கோவம் காட்டியவள்
என் தங்கையோடு இணக்கமாகி
தூக்கத்தைப் பறித்துக் கொண்டாள்!

முந்தானையில் மூச்சைக் கட்டிக் கொண்டவள்
இலவம் பஞ்சாய் என்னைப் பறக்க விட்டு
பணக்கார மாமனோடு
மாலை மாற்றிக் கொண்ட
நியாயத்தைக் கேட்கத்தான் நினைக்கிறேன்!

தீர்ப்பை எழுதி முறித்த பேனாவிற்கு
கேள்வி மட்டுமே துணை!

கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

# அன்புள்ள ஆசிரியருக்கு

கவி வரிகளில்லை உங்களை அலங்கரிக்கவே - இன்று
புது வரிகள் தேடி அலைகின்றேன் - இந்த
புவி மீதில் உங்களுக்காய் 'பூ' மழை பொழிவிக்கவே!

கண்டிப்போடு கற்றுத்தந்தவையும்,
கனிவோடு விட்டுத்தந்தவையும்,
கண்முன்னே கானலாய் இன்று!
ஆசானாகவும் நண்பனாகவும் நீங்கள்
உறவாடியது என்றும் மறவாது!

கல்விக் கடலினிலே ஓடங்களாய்
இருந்து எம்மைக் கரை சேர்த்தீர்!
விளையாட்டுப் பருவமதில் விடிவெள்ளியாய் இருந்தீர்!
விழிநீர் தவிர வேறில்லை விடைகளாய் எங்களிடம்!



இவ்வுலகினில் எதையும் எதிர்பாராமல்
அன்பெனும் சாட்டையால்,
வரலாற்றை படிக்க வைக்கவும்,
புதிய வரலாறு படைக்க வைக்கவும்
உங்களால் மட்டுமே முடியும் !


ஒரு சொல்லில் உங்களை அலங்கரிக்கிறேன் !
ஆம் ஒரு சொல்லில் உங்களை அலங்கரிக்கிறேன் !
"மெழுகுவர்த்தி"
நாங்கள் ஒளிபெற நீங்கள் உருகியதால் !

வளம் பெறட்டும் உங்கள் வாழ்வு !
தடைகளின்றி தொடர வேண்டும்
தங்களது இடைவிடாத சொந்தம் !
அன்புள்ள ஆசிரியருக்காக!

கவிஞர் ரா. ஜோதிமணி, தாராபுரம்

# யாருக்கும் அடங்காதவன்

நான் என்ற மாமாதை உள்ளவன்
தலைக்கனம் பிடித்தவன்
நன்மதிப்பை சமூகத்தில் பெறாதவன்
விட்டுக் கொடுத்து வாழாதவன்
விருப்புடன் யாருடனும் கூடாதவன்
தெரிந்தும் தெரியாதவன் போல் நடிப்பவன்
கூட்டுறவு வாழ்வில் பேணாதவன்
மற்றவர் கருத்தை கேட்டிடாதவன்
உண்மையை உரைக்காதவன்
தன் குற்றத்தை மறைப்பவன்
பிடிவாதக்காரன் அவன்
மரியாதை கொடுக்காதவன்
சமூகத்துடன் அங்கம் வகிக்காதவன்
மொத்தத்தில் யாருக்கும் அடங்காதவன்
சுயநல வாதி அவனே.



கவிஞர் ஏ. எம். முர்ஷிதா பேகம், அக்குரணை (இலங்கை)

# பெண்ணவள்

மண்ணிலே பிறந்த கண்ணவள்
விண்ணிலே பறந்திடும் பொன்னவள்
பெண்ணியம் காக்கும் தாயவள்
மண்ணிலம் போற்றும் பூவையவள்

அடிமையிலே சிக்கும் பாவையவள்
கொடுமைகளை சகிக்கும் பொறுமையவள்
கடுமையோடு நடத்தும் தீயவைகள்
அடியும் உதையும் சுமந்தவள்



கருவிலே சுமக்கும் தாயவள்
நெஞ்சிலே சுமக்கும் தாரமவள்
இல்லத்தை சுமக்கும் தியாகியவள்
காயங்களை சுமந்திட துணிந்தவள்

துணிச்சலும் துணிவும் நிறைந்தவள்
வலியை வலிமையாக மாற்றுபவள்
கண்ணியம் நிறைந்த நிலவவள்
நிலவிற்கே ஒளிபாய்ச்சும் விளக்கவள்

உலகம் முழுவதும் பூத்தவள்
சிந்தனை நிறைந்த பெருநதியவள்
உலகம் போற்றவேண்டிய பாவையவள்

கவிஞர் எச். டீ. எச் பஹ்ரா, கொழும்பு



முதலீடு இறக்காமல்
போட்டியில் இறங்குபவன்
அரசியல்வாதி
முதலீடு இறக்கி
போட்டியில் இறங்குபவன்
அரசியல் சூதாடி

வெற்றி உறுதி எனும் போது
அரசியல் சூதாடி
வேடம் அணிபவன்
தோல்வி உறுதி எனும் போது
அவ்வேடம் துறந்து
ஒதுங்கி நின்று
வேடிக்கை பார்ப்பவன்
எப்போதும்
அரசியல் நோக்கில்
ஒரு வணிகன்
அறத்தின் நோக்கில்
ஒரு ஓட்டுப்பொறுக்கி



கவிஞர் ஆதன் ஆரா, அருப்புக்கோட்டை

# குளத்துக்கரை அய்யனார்

அற மின்றி பொருள் திரட்டி
அக மிறுக்கும் வேளாங் கோடன்.
அஃகசாலை விஞ்சும் அழலன்.

தீரா இன்னல் தீண்டி
திசை யிழந்த குடில்கள்.
காவற்பலி யேற்று அமைதியாக
குளத்துக்கரை அய்யனார் நிற்க.
காலம் மாற்றம் தருமென
காத்திருக்கும் குமரி மண்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# கிராமத்தின் கல்விச்சாலை

ஒத்த வாதி பள்ளிக்கூடம்
ஆங்கிலத்தில் ஏதோ பாடம்
பள்ளிக்கூடம் உள்ளேயே
நிக்குமுங்க ஆடும் மாடும்!

மண் மீது குந்தி படிக்கும்
மரநிழலில் வகுப்பறை
வாத்தி போடும் கணக்குக்கு
காக்கா கூறும் பொழிப்புரை!

எங்களோட நோட்டுல
பேனா மையை விட
பறவையோட எச்சம் தான்
அச்சு போல பதிந்திருக்கும்!

அப்பன் குடிகாரன்
ஆத்தாளுக்கு தோட்ட வேலை
தம்பிபுள்ள பாத்துக்கணும்
வீட்டு பாடம் படிக்கவில்லை!



மின்சார வசதியில்ல
இலவச கணினியை
இயக்கிட முடியவில்லை
இணையதள இணைப்புமில்லை!

அறிவியல் கூடமில்ல
செய்முறை பயிற்சியில்ல
புத்தகத்தில் படித்ததிலே
புத்திக்கேதும் புரியவில்லை!

அப்பத்தா நெஞ்சு நோவு
ஊரில் உள்ள புற்று நோவு
அத்தனையும் தீர்க்கனுமுன்னு
டாக்டராக ஆசைப்பட்டேன்!

நகரத்தில் படிச்ச மகன்
வெளிநாடு போயிடுவான்
கிராமத்துக்காரன் தானே
தன் மண்ணை மதிச்சிடுவான்!

கவிஞர் கவி. சுகரத்னம் (இர. தியாகராசன்)

# நினைவுகளில்!

விழிகள் தேடிய வானம்
மழை மேகத்தினுள் ஒளிந்திருக்க
மழை நிற்க
சூரிய ஒளி
நீர்த்துளிகளினூடே பயணிக்க
வந்ததே வானவில் வானிலே
விழிகள் காண்கின்றதே வானம்!

விழிகள் அலர்கதிர் ஞாயிராக
நெஞ்சமோ கலங்கிய நீரோடையாக
நா உலர்ந்து உடல் அலுத்து
வழி தேடும் இருளிலே
ஒளி தேடும் பயணம்!



உணர்வுகள் எரிமலையாய் சிதறாது
அடிவானம் தேடி அலையாது
ஒருமனமாய் ஒருவழியே
ஒருமித்து வாழ
உணர்ந்து செல் மனமே!

நெஞ்சம் இரண்டு - பயணிக்கும்
இருவழிகளில்
மனம் ஒன்று கனக்கும்
இரண்டும்
ஒரு வழி சேர!

நினைவுகளிலிலேயே புலர்கின்ற மாலை
பெரும்புலர்காலையில் கனவுகள் வருமா
அயர்ந்து கண்ணுறங்க
அயராத விழிகள் வாஞ்சிக்குதே!

கவிஞர் செல்வக்குமரன் சுரேஷ்குமார், சீனா

எல்லை இல்லா மனஅழுத்தங்களை
தொல்லையின்றி
நெஞ்சகற்றி விடும்...
தூரங்களின் வளைவும்
சரிவும் நெலிவும்
வாழ்வின் ரகசியம் சொல்லிவிடும்.

ஓடும் நதியும்
வளைவையே தழுவிக்கொள்கிறது,
நெடுந்தூரச் சாலையும்
வளைவையே காட்டிக்கொள்கிறது.
செல்லும் தூரமே
சொல்லுமே மனக் குதுகலத்தையே.
வெறுப்புகளையும்
பசைப்போட்ட வலிகளையும்
ஒளிவீசி மறைத்திடும்
அதுவே பயணம்.




துள்ளிக்குதித்து
புது சிசுவாய் பிறந்ததுபோல்
எண்ணத்தை தோற்றுவிக்கும்.
காற்றோடு கதைப்பேசி
காயங்களையும் காய்ந்திடும்.
புரியாத மொழியிலானோரையும்
இன்முகச் சிரிப்பில் ஆழ்த்திடும்.

வானமே தூரமே,
எட்டிப் பிடிக்க மேகமே.
கீழ் இறங்கி வாவென சொல்லி வைத்தால்
மேகம் காற்றாய் மாறி,
பனியாய் எம்மில் கலந்திடும்.
மழையாய் மாறி சாரல் தூவி
நெஞ்சை குளிர்விக்கும்.
சில்லிடும் வானம் தொட்ட தண்ணீரை
அள்ளிச் சொறிக்கும் அருவியின்
பாடலோடு மனமும் லயிக்கும்.

பல்லவி தோற்றுவிக்கும்,
மனதின் ரணமெல்லாம் மாறி,
வலியை அகற்றிவிடும்.
அழுத்தம் வெளுக்க,
கண்ணுக்கெட்டா காயங்களையும்
தகர்த்து விடும்
அதுவே பயணம்.

கவிஞர் சஹ்னாஸ் பேகம்

# முகமுடி



மனிதருக்கு மனிதர்
மாறும் முகங்கள்.
இடத்திற்கு இடம்
பதித்திடும் தடங்கள்.

காலங்கள் கொடுக்கும்
கதாபாத்திர மேற்று.
நடிக்கிறோம் நாளும்
பொய்வேடம் போட்டு.

உள்ளம் அழுதிடும்
உதடுகள் சிரித்திடும்.
உள்ளொன்று இருக்க
புறமொன்று பேசிடும்.

சொல்லில் ஒன்று
செயலில் ஒன்று.
வாய்ச்சொல் தவறாதென
வாக்களிப்பார் சென்று.

கள்ளுக்கும் பாலுக்கும்
நிறங்கள் ஒன்று.
ஆராய்ந்து பார்த்தல்
மனிதருக்கு நன்று.

கல்லும் கரைவதுபோல்
கற்கண்டாய் பேசிடுவார்.
சொல்லில் தேன்வடிய
தேளாலாக கொட்டிடுவார்.

நடிக்கும் மனிதர்களையே
நல்லவரென நம்பிடுவோம்.
உண்மை அன்பினை
உதாசீனப் படுத்திடுவோம்.

அறம் செய்வதுபோல்
ஆராதனை செய்திடுவார்.
நடிக்கத்தெரிந்த நரிபோல
நடிப்பாலே உலகை நெய்திடுவார்.

அகத்தினில் உண்மையற்ற
அன்பில்லா அரக்கர்கள்
முகமுடி போட்டுதினம்
முழுஉலகை ஏய்த்திடுவார்.

கவிஞர் தி. செல்வராணி, திட்டக்குடி

# ஆறா ரணங்கள்

காயப்பட்ட இதயத்தில்
ஏக்கங்களும் வெறுப்புகளும்
மட்டும் இருப்பதில்லை.

அன்பு என்ற
ஒன்று நிறைந்திருப்பதாலே
ஆறா ரணங்கள்
அடிமனதில் நிலைத்திருக்கின்றன.

இந்தச் சூட்சமம்
முன்பே உணர்ந்திருந்தால்
பாசத்தையும் நேசத்தையும்
அடியோடு நிராகரித்திருப்பேன்.



கவிஞர் அஞ்யுகா ஸ்ரீ, நாமக்கல் மாவட்டம்

# தனிமையே இனிமையே



அலங்கரித்து
ஆசையுடன் அமர்ந்து
அலங்காரம் செய்கிறது
தனிமையின் இனிமை

வெள்ளைக் காகிதமென
நினைத்திருக்கையில்
கொல்லென்ற நகைப்பில்
தனிமையின் திறமை

என் இனிமையென
சுகித்திருக்கையில்
நீருற்றுப் போல் பிரவாகமாக
பொங்கும் சத்தம்
அலுங்காமல் அசைப்பதில்
வல்லமை திறன்

தனிமையின் தீண்டலில்
தலையின் உலுக்கல் சற்று
தனியாக இருக்கவென
பிரபஞ்சத்தை தேடுகையில்

எள்ளலாய் நானும்
உன்னுடன் என தனிமையும்
தத்தளிப்பும் தாளமும்
இனிமையை சற்றே நகற்றியது

இனிமையும் தனிமையும்
ஏற்கவா எழுந்திடவா
உதறி கலைய மனமற்று
இதுவும் போதை தானோ

கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி, நாகப்பட்டிணம்

நீள்வரை முகில்கள்
நெடுவீழ் அருவிகள்
காண்வரைக் குன்றுகள்
கடைவரை மழையென
மழை நாளொன்றில்
மலைநாள் நிறைந்தது.



கவிஞர் ஜெகஜெகதீசன்

# சாபம்

சாபம் கூட
மறுக்கப்பட்டுகிறது,
சஞ்சலமன்ற
மனதிடம்.

தோன்று போகிறது
வாழ்க்கையும்
அவளிடம்.



கவிஞர் கார்த்திகா, கோயம்புத்தூர்

# வாழ்க்கை ஓர் அனுபவம்

கரைந்து போன காலங்களை
நினைவு கூர்ந்து அசைபோடும்
பொக்கை வாய் கிழவனின்
வார்த்தைகள் ஓர் அனுபவம்.

வீட்டு மூலையில்
தனிமையில் கிடக்கும்
படுக்கை நாற்காலியில்
படுத்துக்கொண்டே
சிந்திக்கும் பதவி
ஓய்வு பெற்ற மனிதனின்
வாழ்வு ஓர் அனுபவம்.

எதையும் அனுபவிக்காத
எச்சில் இலையின்
பருக்கைக்காக அலைந்த
பிச்சைக்காரனின்
பசி ஓர் அனுபவம்.

பயணச்சீட்டு பெற்று
இருக்கையின் முகப்பில் இருக்கும்
இன்னொருவரின்
கதையைக் கேட்டு
கண்ணீர் விடுவது
ஓர் அனுபவம்.



சிறைச்சாலை
கம்பிகளின் வெளியே
சிறகடிக்கும் கைதிகளின்
கற்பனை ஓர் அனுபவம்.

வெற்றிலை இடித்துக் கொண்டே
திண்ணைக் கதையில் வாழ்க்கைக்கு
தீர்வு தரும் பாட்டியின்
பக்குவம் ஓர் அனுபவம்.

மாறுபட்ட மனிதர்கள்
வேறுபட்டு இருந்தாலும்
மனித வாழ்வு கற்றுத்தரும்
கடைசி பாடம் ஓர் அனுபவம்.

கவிஞர் தி. கமலவேணி, மானியம் ஆடூர்

கோவில் வாசலில் பெருத்த கூட்டம்
அனைவரும் கருவறையை நோக்கி
ஓடுகின்றனர் முதல்வாயில் கடந்து
இரண்டாம் வாயிலில் சூடான பொங்கலும்
தயிர் சோறும் வழங்கினார் ஒருவர்
வரிசை கட்டி நின்றனர் மக்கள் அனைவரும்
பொங்கல் வாங்க கடவுள் பக்தியோடு



கவிஞர் அக. வீரவன் சீராளா, சிதம்பரம்

மரங்கள்
இலைகளை
முழுவதுமாக
உதிர்க்க
முழு நிலவொன்று
முகம் காட்டி சிரிக்க
பட்ட மரம்
மகுடம் சூடுகிறது



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# அமைதிப்புறா

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராதிருப்பதை நாட்டிற்கு இலக்கணமாய் நவில்கின்றார்
வள்ளுவரும்! தீவிரவாதம், வன்முறைகள், ஆக்கிரமிப்பு,
எல்லை தாண்டிய பயங்கரவாதம் இவையெலாம்
உலகெங்கும் போர்மூளக் காரணமாய் அமைகிறதே!
இலக்கினைத் துல்லியமாய்த் தாக்குகின்ற ஏவுகணைகள்!
உலையாகி உயிர்குடிக்கும் அணு ஆயுதங்கள்!
பலவகையில் பாதிப்பை ஏற்படுத்தும் போர்க்களங்கள்!
மழலைகளின் பார்வைகளில் மரணபயம் தகுமா?
அழுகின்ற அப்பாவிகளின் கூக்குரல்கள்! வாழிடங்களை
இழந்து தவிக்கின்ற பல்லாயிரம் மக்கள்!
இந்நிலைகள் மாறி இன்பநிலை பெருகிட
சென்றிடு இப்போதே தூதாக அமைதிப்புறாவே !
அமைதியின் தூதுவனாய் உனையே காண்கின்றோம்!
கைகளில் கிளையுடன் பறக்கும் உனைக்
காண்கையிலே கண்களில் நம்பிக்கை ஒளிர்கிறதே!
உலகெங்கும் ஒற்றுமை விதைகளைத் தூவிடு!
எல்லைகள் உனக்கில்லை! இனம்,மதம் உனக்கில்லை!
மாறுபாடுகளை மறைத்து மானுடம் தழைக்கச்செய்!
சினந்தணித்து சண்டைகள் விலகி தரணியிலே
அன்புநிலை தழைக்க ஆவன செய்வாயே!
மனிதம் தழைக்க மானிடர்க்குப் பாடம்சொல்!
அனைவரின் உள்ளத்தும் நிலையாய் வீற்றிருப்பாய்!
அமைதியின் தூதுவனாய் என்றும் நீயிருப்பாய்!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

# பிறவி அகவல்

இருபால் சேர்ந்து
இருமனம் இணைந்து,
இருபது விரல்கள்
இணைந்து பிணைந்து,
கலவியில் துளிர்த்து
வியர்வையில் நனைந்து,
ஒருதுளி அணுவில்
மலரும் கருவினை,

முந்நூறுநாள் சுமந்து
பூமியில் விழுந்து,
உதிரம் அருந்தி
மலம்சலம் வந்து,
தாயின் வயிற்றில்
எட்டி உதைத்து,
தந்தையின் நெஞ்சில்
ஏறி மிதித்து,



உறவுகளோடு ஓடி
நடந்து மண் அளைந்து
மழலை மொழிந்து
அறிவு வளர்ந்து,
கல்வியும் கலையும் கற்க,
பள்ளிக்குச் சென்று,
வடிவினன் ஆகி, அறிவினன் ஆகி
ஐந்து வயதாகி வரும் பருவமே!

கவிஞர் கோ. தனுசன் இமட்டக்களப்பு (இலங்கை)

# போதும் போர்

எவ்வளவு நாட்கள் வாழ்வோம் என்ற
வரைமுறை இல்லாத உலகினிலே
போர்க்கொடி தூக்கி
அலையும் மானிடர்களே




மழலைகள் முதல்
மாந்தர்படும் துயரமது அறிவீரா?
உண்ண உணவின்றி பதுங்கி
வாழ்ந்திடும் வேதனையைக் கண்டீரா?

நிதம் உறக்கமின்றி உருக்குலைந்து
உற்றார் உறவினரைத் தொலைத்து
உயிரிருந்தும் சடலமாய்
வலம் வருவோரைக் கண்டீரா?

பொல்லாத பூவுலகில் ஏன் பிறந்தோம் என்று
அவல நிலையால் உள்ளம் குமுறுகின்றனரே!
சமத்துவம் பகுத்தறிவு என்று
வாய் மொழிக்காக பேசிடும் அறிவிலிகளே

போதும் போர் நிறுத்திடுங்கள்
உங்கள் யுத்தத்தை

மனிதாபிமானமது தழைத்தோங்கட்டும்
யுத்தமது முடிவுக்கு வரட்டும்
மாந்தர்கள் நலமுடன் வாழவே!

கவிஞர் இரா. கோமதி இசொள்ளாச்சி

# மன உண்டியல்

அவள் என்னுடன்
பேசிய சொற்களையெல்லாம்
என் மனஉண்டியலில்
சேமித்து வைக்க ஆரம்பித்தேன்.
இப்பொழுது அது நிறைந்து விட்டது.
நானெப்படி அதை உடைப்பேன்?



கவிஞர் ஸ்ரீவி. முத்துவேல், சென்னை

யாரோ
ஒரு மனிதன்
மறித்ததற்காக
ஒரு இனத்தையே
அழித்து
வீதியில் வீசுவது
எப்படி நியாயமாகும்?
இப்படிக்கு
பூவினம்.



யாரோ
ஒரு பெண்
பட்டாடை கட்டி
அலங்கரித்துக்கொள்ள
ஒரு இனத்தையே
அழிப்பதென்பது
எப்படி நியாயமாகும்?
இப்படிக்கு
புழுவினம்.

யாரோ
ஓர் மனிதன்
ருசிப்பதற்காக
உழைப்பில் மலர்ந்த
தேனை
திருடிச்செல்வது
எப்படி நியாயமாகும்?
இப்படிக்கு
தேனிக்கள்.

யாரோ
ஒரு சாதியவாதி
பற்றவைத்த நெருப்பு
ஒரு காவியத்தை
சுவடு தெரியாமல்
அழிப்பதென்பது
எப்படி நியாயமாகும்?
இப்படிக்கு
காதல்.

கவிஞர் இளங்கோவன் மணியன், திருச்சி

# மலராத குவளை

அந்தி நிறம்தான்
அவள் அழகே
மஞ்சள் பூசியே வருவாள்
என் பள்ளித் தோழி

நீலக்கலர் பாவாடையில்
மலராத குவளைப்பூ
அவள் திருவாயில் இனிக்கும்
தமிழ்த்தாய் பாடல்



பூந்தளிர் பரிமளிக்கும்
பரிசுத்த முகம்
வெண்பட்டின் ஒருபக்கம்
அவள் பாதம்

அவள் சிரிக்க
சாக்பீஸ் துகள்கள் தூவும்
காற்றோடு அதிகம் பேசும்
அவள் கூந்தல்

மையிட்ட புருவம்
கூர்மையான பென்சில்
கைக்குள் மடித்த
வானவில் கைக்குட்டை

சடை ரிப்பன்
சமாதானப் புறா
அவள் வெட்கத்தில்
நிறையவே நாணம்

அவள் நிழலோடுதான்
வகுப்பறை நாட்கள்
பட்டாம்பூச்சியாய் வந்தாள்
என்னுள் மலராமலே போனாள்

சர்க்கரைப் போல
ஆண்டுகள் கரைந்தன
நினைவுகள் மட்டும்
நெஞ்சில் இன்றளவும் காய்ந்து விடவில்லை!

கவிஞர் பெனீஷ், நெல்லை

### மனவெளியில்



வார விடுமுறையில்
இல்லத்தின் இருந்த
கணங்களின் உவகை
உறவுகளோடு கழித்த
சந்தோஷப் பொழுதுகள்
நம்பிக்கையோடு
யாருமற்ற கணத்தில்
ஆலயத்தில் முணுமுணுத்து
இறைவனிடத்தில் இறைஞ்சி
அமைதி பெற்றது
தோழமைகளோடும்
அறிந்தவர்களிடத்தில்
உதட்டுமொழி பகிர்ந்தது
செய் பணிக்கு திரும்பிய பின்
கர்ம சிரத்தையாய்
வருத்த நினைவுகளையாயும்
எதிர்பார்ப்பு உணர்வாயும்
ஞாயிறை எதிர்பார்த்து
பல ஆண்டுகளாய்

****

### யார் அது?

செய் பணியில்
எண்ணியபடி
செயலாக்கம்
அமையும் போது
எதிர்பாரா உதவிகள்
கிடைக்கும் போது
பின் தொடர்ச்சியில்லாமால்
சகாக்கள்
தகவல்கள் தருகின்ற போது
விமர்சனமே
சொல்லிக்கொண்டிருப்பவர்
நன்று என
சொல்கின்றபோது
ஒரு பணியில்
இருக்கும் போதே
பதற்றம் கொடுக்கும்
அடுத்தது பற்றிய
எண்ணம் இல்லாதபோது
பணிக்கிடையிலே
பாராட்டு கிடைக்கும் போது
கொஞ்சம் கொஞ்சமாய்
பெரியவராகிறார்
யார் அது
தன்னம்பிக்கை

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

பிடித்தம்
சிறிது நாளில் பிடிவாதம் என்றாகிவிடும்
***

நுரையீரல்
காற்றுக்கு
வேலி
***

என்னை தேய்த்து குளி காதலி,
சூடு தணியும்
எண்ணெய் வேண்டாம்
***

எல்லாமே கற்பனைதான்
என்னை தவிர என்கிறான்
எழுத்தாளன்
***

முதலில் தமிழில் பேசுங்கள்
பிறகு வேண்டுமென்றால்
தூய்மை படுத்தி கொள்ளலாம்
***

பல் வலியில்
பல்லவி பாட வலு கொடு
இறைவா
***

விபூதிகளை ஏந்தும்
யாழிகளை
சுத்தம் செய்ய வேண்டும்
***

அடுத்த ஜென்மத்திலாவது
முதலில் மழையில் நனைந்த தேதியை
குறித்து வைத்துக்கொள்ள வேண்டும்
***



இறந்த பின் ஒரு வாரம் கழித்து தந்தி சேரும்
இன்று முகம் பார்த்து திரையில்
பேசிக் கொண்டிருக்கிறோம்
குறை கூறாதீர்கள் தொழில்நுட்பத்தை
***

அனைவரும் அடங்கிவிட்டதால் என்னவோ
அந்தி மாலை
அவ்வளவு அமைதி
***

ஊர் அடங்கினால்தான்
ஊர் அடங்கு
முடியும்

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன், கும்பகோணம்



ஒவ்வொரு பெண்ணும் மெழுகுவர்த்தி போலவே =- தனக்காகவோ இல்லையெனில் பிறருக்காகவோ தினமும் உருகிக்கொண்டே இருப்பாள். அவள் சட்டென்று தன் வலியை வெளிப்படுத்துவதில்லை; ஆனால் உள்ளுக்குள் அடக்கிக்கொண்டிருப்பதால் தான் அவள் கோபமும் வருத்தமும் தன்னிடமே சுழன்று கொண்டே இருக்கும்.

பெண் வாழ்வில் புது அத்தியாயம் தொடங்குவது பெரும்பாலும் திருமணத்தில்தான். தாய் தந்தையின் அரவணைப்பிலிருந்து கணவனின் அரவணைப்புக்குள் செல்கையில், தன்மைகள் பொருந்தாமல் போனால், அவள் தான் தன்னையே மாற்றிக்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் சிக்கிக் கொள்வாள்.
பெற்றோரின் கட்டுப்பாட்டோடு வளர்ந்தவள் அமைதியாகவும், அடங்கி இருந்தவளாகவும் இருப்பாள். கணவனுக்குத் தன்னைப் பொருத்திக்கொள்ள வேண்டிய போது அவள் கடுமையாகப் போராடுவாள்.
பெற்றோரின் சுதந்திரத்தோடு வளர்ந்தவள் விரைவில் கணவனோடு பொருந்திக்கொண்டாலும், தந்தைப்போல் பராமரிப்பு இல்லாதபோது அதனை ஏற்றுக்கொள்வதில் சிரமப்படுவாள்.

ஏன் இப்படி என்ற கேள்வி எழும் போது தான் — பெண்ணின் நிலைமையும் அவள் சந்திக்கும் சுமையும் தெரியும். அதுவரை அதை யாரும் உணரமாட்டார்கள். கணவன்—மனைவி இடையே வாக்குவாதம் ஏற்பட்டால், கணவன் வெளியுலகத்தைச் சந்தித்து நண்பர்கள், வேலை, நிகழ்வுகள் மூலம் மன அழுத்தத்திலிருந்து தப்பிக்கிறான். ஆனால் பெண்? அவள் நான்கு சுவர்களுக்குள் அடைந்து போய், நடந்ததை மீண்டும் மீண்டும் நினைத்துக் கொண்டு, இல்லாதவையும் பொல்லாதவையும் மனதில் ஊட்டி சோர்ந்து விடுகிறாள்.

கவிஞர் சஹீனாஸ் பேகம் இ முதலைப்பாளி இ புத்தளம் (இலங்கை)

## சோர்வு - பெண்

## தேடல் - 05

ஆண்கள், பிள்ளைகள் வெளியுலகில் புதிய அனுபவங்களை கண்டால் பழையவை மறந்து விடுகிறார்கள். வீடு திரும்பியபோதுதான் மீண்டும் நினைவு வருகிறது. ஆனால் பெண்? அவள் உள்ளுக்குள் தாங்கிக் கொண்டிருக்கும் சிந்தனை மாறுவதில்லை. அதை மாற்ற ஒரே வழி — யாரோடாவது மனம் விட்டு பேசுதல், அல்லது மௌனமாக நடந்து செல்வது, சிறு பயணம் செல்வது. சோர்வை அகற்ற சில நடைமுறை வழிகள் (வீட்டிலிருக்கும் பெண்களுக்காக)

### 1. மனம் திறந்து பேசுதல்

நெருங்கிய தோழி, அக்கா அல்லது குடும்பத்தில் யாராவது ஒருவரிடம் சுமையை பகிர்ந்து கொள்ளுங்கள்.
பேச முடியாவிட்டால், தினசரி உணர்வுகளை ஒரு குறிப்பேட்டில் எழுதுங்கள்.

### 2. உடல் இயக்கம்

வீட்டுக்குள் இருந்தாலும் குறைந்தது 15—20 நிமிடம் நடைபயிற்சி செய்யுங்கள். மெதுவான உடற்பயிற்சி, யோகா, சுவாசப் பயிற்சி மனதை அமைதிப்படுத்தும்.

### 3. சிறு இடைவேளை (Me-time)

ஒரு காபி குடிக்கும்போது கூட தன்னைத்தான் கவனிப்பதற்கான நேரம் ஒதுக்குங்கள். விருப்பமான இசை கேட்கவும், சிறு புத்தகம் படிக்கவும்.

### 4. படைப்பாற்றலைப் பயிற்சி

ஓவியம், சமையல் புதிய ரெசிபி, தோட்டப்பணி — ஏதாவது ஒரு சுவாரசியத்தில் மூழ்குங்கள். இது மனதை வேறு திசைக்கு திருப்பும்.

கவிஞர் சஹ்னாஸ் பேகம் முதலைப்பாளி புத்தளம் (இலங்கை)

**5. பிரார்த்தனை & தியானம்**

**ஆன்மீகத்தில் தன்னை ஆழ்த்தினால் மன அழுத்தம் குறையும். தியானம், ஜெபம் போன்றவை உள்ளார்ந்த அமைதியைத் தரும்.**

**6. சமூக உறவுகள்**

**சுருக்கமான வெளியே செல்வது — சந்தையில் போவது, உறவினர் வீடு செல்வது, அருகில் உள்ள பூங்காவில் சிறிது நேரம் செலவிடுவது. வெளியுலகை காண்பது மனதிற்கு புத்துணர்ச்சி தரும்.**

**பெண்கள் தினமும் அன்புக்காக உருகுகின்ற மெழுகுவர்த்தி போல இருக்கிறார்கள். அவர்கள் வெளிப்படுத்தாமல் அடக்கிக் கொள்வதே சோர்வின் காரணம். ஆனால் அந்தச் சோர்வு வேரூன்றாமல் இருக்க, மனம் திறந்து பேசுதல், உடல் இயக்கம், சிறு இடைவேளை, படைப்பாற்றல், தியானம், சமூக உறவுகள் ஆகியவை அவசியம்.**

**பெண்கள் சோர்வை அகற்றி தங்களை சமநிலையுடன் வைத்துக் கொண்டால், வீடும் குடும்பமும் ஒளிர்ந்து நிற்கும்.**



# டுஜக் டுஜக்

## நூல் அனுபவம் — கவிதைத் தொகுப்பு

**ஒரு அப்பாவின் டைரி ; தேனி சுந்தர்**
**வெளியீடு புக்ஸ் ஃபார் சில்ரன் ; முதல் பதிப்பு நவம்பர் 2021**
**மூன்றாவது பதிப்பு ஜனவரி 2025 ; பக்கம் 112 ; விலை ரூபாய் 120**




மழலைச் சிறகில் மனம் பெறும் அனுபவங்கள். எல்லோருக்கும் குழந்தைச் செல்வங்கள் வரமெனக் கிடைத்து வாழ்வாங்கு வாழ்கின்ற வாழ்வை இல்லறம் ஏற்படுத்தித் தருகிறது. ஆனால் எல்லோருமே குழந்தைகளின் இயல்பை, குழந்தைத் தன்மையை விரும்பி ரசிக்கின்ற அதே நேரம் அதை ஆவணமாக பதிவாக நினைவுபடுத்தி வைப்பதில்லை. அப்படி ஒரு அப்பாவின் டைரியில் தனது பிள்ளைகளின் மழலைத்தனமான வினாக்களையும் அவர்களின் குறும்புகளையும் பதிவு செய்து பொதுவெளியில் உலவ விட்டிருக்கிறார் தேனி சுந்தர். கல்வியின் பல அம்சங்களை குறித்து பொது அரங்குகளில் பல முக்கியமான விமர்சனங்களையும் விவாதங்களையும் நிகழ்த்தி வருபவர். கற்றல் கற்பித்தல் தொடர்பான அனுபவங்களை நூலாக எழுதியிருப்பவர் தேனி சுந்தர்.

சிறு குழந்தைகள் அப்பாவுடன் நடத்தும் உரையாடல் வழியே அவர்களுக்கு உரிய மழலைத்தனமும் எதையும் கேள்வி கேட்கும் தன்மையும் இயல்பாகவே அமைந்து விட்டு விடுதலையான சுதந்திரத்தனத்தில் பெரியவர்களின் வாழ்க்கை முறையையும் ஏன் எதற்கு எப்படி என்ற கேள்விகளின் வழியே வளரும் உரையாடலகளை கவிதைகளாக எழுதி தேனி சுந்தர் காட்சிப்படுத்தி இருக்கிறார்.

பொதுவாகவே எல்லோரது வீடுகளிலும் குழந்தைகள் தொடர்ந்து பேச ஆரம்பிக்கும் போது இது ஏன் இப்படி என்ற கேள்விகளால்

கவிஞர் இளையவன் சிவா

பெற்றோர்களை துளைத்தெடுக்கும் போது அவர்களை அடக்கி வாயை மூடிக் கொள்ள வைப்பது நிறைய பேரின் வேலையாக இருக்கிறது. ஆனால் ஒரு சிலரே அவர்களின் கேள்விகளில் இருக்கும் ஆர்வத்தையும் எதையும் தெரிந்து கொள்ளும் மனப்பான்மையையும் அறிய வைத்து அவர்களை உரையாடலுக்குள் இடம்பெற வைத்து சுதந்திரமான தருணங்களில் அவர்களுக்கு பொது நிகழ்வையும் புரிய வைப்பதில் ஈடுபாடு காட்டுகிறார்கள். அப்படி ஓர் அழகான தருணங்களை தனது பிள்ளைகளுக்கு வழங்கி அவர்களின் அழகிய மொழியை படம் பிடித்து இருக்கும் ஆசிரியருக்கு குழந்தைகளின் வினாக்களே நிறைய தேடலை உண்டாக்கி இருக்கும் என்பதில் ஐயமில்லை.

நம்மில் நிறையப் பேருக்கு குழந்தைகளின் பேச்சு அர்த்தமற்றதாகவும் புரியாததாகவும் மாறிவிடுகிறது. ஆனால் அர்த்தமற்ற பேச்சிலிருந்து துவங்கும் அவர்களின் உரையாடலே அவர்களை புதிய புதிய உலகத்திற்கு அழைத்துச் செல்கிறது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். குழல் இனிது யாழ் இனிது என்று சொன்ன வள்ளுவன் கூட அவரவருக்கு அவரவர் பிள்ளைகளின் பேச்சே இனிமையானது என்று முடிவுரை எழுதுகிறார். ஆனால் எல்லாப் பிள்ளைகளின் மழலைத் தன்மையையும் ரசிப்பதில் வகுப்பறை தனிச் சிறப்பு வாய்ந்தது. ஒரு மாணவன் வளரும் பருவத்தில் அவன் காணும் காட்சிகளையும் அவன் முன்னே நடக்கும் செயல்களின் வழியேயும் அவனது கற்றல் தொடங்க ஆரம்பிக்கிறது. அப்போது அவனுக்குள் எழும் சந்தேகங்கள் அவனைத் தொடர்ந்து கேள்விகளுக்குள் இழுத்துச் செல்கின்றன.

குழந்தை மொழியை கண்டுகொள்ளும் ஒவ்வொருவரின் இதயத்திலும்ம் புதிய புதிய அறிவுச்சாளரம் திறக்கத் தொடங்குகிறது. பள்ளியோ வீடோ குழந்தைகளின் கேள்விகளுக்கு சற்று செவிசாய்த்தால் அவர்களுக்கும் புதிய புதிய சிந்தனைகள் எழும். அதனால் புதிய புதிய செயல்களை அவர்களைக் கொண்டு உருவாக்கி விட முடியும்.

"சேர்ல உட்கார்ந்து
படிச்சிக்கிருந்தேன்.
அடிக்கோடு போட
வச்சிருந்த பேனா
கைதவறி
கீழே விழுந்துடுச்சு
கொஞ்சம் தள்ளி
எதையோ வெட்டி ஒட்டிக்கொணடிருந்தவன்
அதை எடுத்து நீட்டினான்
கை நீட்டினேன்
எட்டல....
உடம்ப உயர்த்தி
இன்னும் கொஞ்சம்
பக்கமாய் நீட்டினான்.
அப்பவும் எட்டல...
நான் நீட்டியபடி இருந்தேன் கோபம் வந்திருச்சு
அவனுக்கு...
நாங்கதான்
உங்க லெவலுக்கு வரணுமோ கொஞ்சம் கூட
எறங்க மாட்டீங்களோ என்றான். கேள்வி
பேனா சம்பந்தப்பட்டது மட்டுமல்ல....."

"பூனைக்குட்டி எப்பவுமே
அவங்க அப்பத்தா கூடவே தான் இருக்கும்."

இந்த வரிகளை மனிதர்களுக்கு பொருத்திப் பார்ப்போம். பிஞ்சுக் குழந்தைகளின் மனதில் தங்களது தாத்தா பாட்டிகளை தொலைத்து விட்ட ஏக்கமும் அவர்கள் இருந்தும் தனியாக இருப்பதோ அனாதை இல்லத்தில் இருப்பதோ அவர்களை எவ்வளவு பாதிப்புக்குள்ளாக்கி இருக்கும் என்பதையும் நாம் அர்த்தப்படுத்திக் கொள்ளலாம்.

கவிஞர் இளையவன் சிவா

"அப்பாவ எங்கம்மா?
திண்டுக்கல்ல மீட்டிங்ன்னு
போயிருக்காரு.
இவ்ளோ நேரமாச்சு
இன்னுமா மீட்டிங்கு?
இப்பதான்
பஸ் ஏறி இருக்காராம்.
வர லேட்டாகும்.
சரி சரி
லேட்டாவே வரட்டும்.
என்னடா
அப்பாவக் காணோம்னு
ஆர்வமாக் கேட்ட
இப்போ
லேட்டாவே வரட்டும்னு சொல்ற?
ம்ம்..வந்தன்னியூம்
அத எழுதிட்டியா
இத எழுதிட்டியான்னு
கேப்பார்ல
லேட்டா வந்தா
அதுக்குள்ள
நா தூங்கிருவேன்ல...!

ஏண்டா டேய்...!"

குழந்தைகள் நடத்தும் உரையாடலில் பெரியவர்கள் புரிந்து கொள்ளும் புதிய புதிய பண்புகளையும் இந்த நூல் கோடிட்டுக் காட்டுகிறது.

விளையாட்டுக்களில் தம்மையே மறந்துவிடும் உற்சாகம் தவறுகளை உடனேயே மறந்துவிட்டு மன்னிக்கும் மனப்பக்குவம் பொம்மைகளின்

மீதான தாய்மை உணர்வு தமக்கு முழுமையாகப் புரியும்வரை விடாது நச்சரிக்கும் தேடல் வளர்ப்புப் பிராணிகள் மீது வைக்கும் கண்மூடித்தனமான பாசம் போன்ற குழந்தைகளின் உலகத்திற்குள் நாமும் நுழைந்து அவர்களாகிவிடுகையில் நமக்கும் இறகுகள் முளைத்து விடுகின்றன.

சில சமயங்களில் குழந்தைகளின் சிந்தனை பெரியவர்களின் சிந்தனைகளைத் தாண்டி அடுத்த கட்டத்தை நோக்கி நகர்ந்து விடுகின்றன. அப்போதெல்லாம் நாம் அவர்களை வியப்புடன் பார்ப்பதிலிருந்து விலகி 'அதிகப்பிரசங்கி', 'ஒன்னும் தெரியாது' என்று அவனை அடக்குவதிலேயே காலத்தை தொலைத்து விடுகிறோம். இன்றைய சூழலில் பள்ளியும் வீடும் குழந்தைகளுக்கு பாடங்களைக் கற்றுக் கொடுப்பதில் காட்டும் ஆர்வத்தையும் தீவிரத்தையும் அவர்களது வினாக்களுக்கான விடைகளைத் தேட வைப்பதில் நேரத்தை செலவிடுவதில்லை. அறச் சிந்தனைகளை பிற மனிதர்களை நடத்தும் பண்புகளை அவர்களுக்கு கற்றுக்கொடுக்கும் ஒவ்வொரு நேரமும் அவர்களது மனங்களுக்கு நாம் மதிப்புக் கொடுத்தல் அவசியம் என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும். நூலின் கவிதைகள் அத்தகு உணர்வுகளையே பேசுகின்றன. மழலைகளின் சிந்தனைகளைக் கொஞ்சம் செவி சாய்த்து அவர்கள் மொழியில் அவர்களுடன் பயணிக்கும் போது நமக்கும் புதிய புதிய கருத்துக்கள் உருவாகி நல்லதொரு செயல்பாடுகளை நோக்கி நாமும் நகர்ந்து விடக்கூடும். குழந்தைகள் வளரும் போதும் அவர்களோடு சேர்ந்து நாமும் வளர்கிறோம். அத்தகு வளர்ச்சியை சமூகத்திற்கு பயனுள்ளதாக மாற்றிக் காட்ட குழந்தைகளின் இத்தகு கவிதைகளுக்குள் நம்மை கொஞ்சம் இளைப்பாற்றிக் கொள்வோம்.

# 'சொல்லின்செல்வர்' இரா.பி.சேதுப்பிள்ளை

கட்டுரை

**பிறப்பு:**



திருநெல்வேலிக்கு அடுத்து தாமிரபரணி ஆற்றங்கரையில் அமைந்த இராசவல்லிபுரம் என்ற ஊரில் 02.03.1896 பிறவிப் பெருமான்பிள்ளை - சொர்ணம்மாள் தம்பதியினருக்குப் பதினோராவது பிள்ளையாகப் பிறந்தார்.

சேதுக்கடலாடி இராமேசுவரத்திலுள்ள இறைவனைப் பூசித்ததால், பிறந்த தம் மகனுக்கு சேது என்று பெயர் சூட்டினர்.

இரா.பி. சேதுப்பிள்ளையின் முன்னெழுத்துகளாக அமைந்த 'இரா' என்பது இராசவல்லிபுரத்தையும் 'பி' என்பது 'பிறவிப்பெருமான்பிள்ளை' அவர்களையும் குறிப்பன.

**கல்வி:**

தனது ஐந்தாம் அகவையில் உள்ளூர்த்திண்ணைப்பள்ளியில், தமிழ் நீதி நூல்களைக் கற்றார். இராசவல்லிபுரம் செப்பறைத் திருமடத்தலைவர் அருணாசல தேசிகரிடம் மூதுரை, நல்வழி, நன்னெறி, நீதிநெறிவிளக்கம், தேவாரம், திருவாசகம் போன்ற நூல்களைக் கற்றார். தனது தொடக்கக் கல்வியைப் பாளையங்கோட்டை தூய சேவியர் உயர் நிலைப்பள்ளியிலும், இடைநிலை வகுப்பின் (இண்டர்மீடியட்) இரண்டாண்டுகளை திருநெல்வேலி இந்துக் கல்லூரியிலும், இளங்கலை வகுப்பின் இரண்டாண்டுகளைச் சென்னை பச்சையப்பன் கல்லூரியிலும் தேர்ச்சி பெற்றார்.

தாம் படித்த பச்சையப்பன் கல்லூரியிலேயே ஆசிரியராக பணியாற்றிக் கொண்டே சட்டக்கல்லூரியில் மாணவராகச் சேர்ந்து படித்தார். சட்டப்படிப்பை முடித்து நெல்லை திரும்பிய சேது, நெல்லையப்பபிள்ளையின் மகள்ஆழ்வார்ஜானகியைமணந்தார்.

திரு அ.வில்சன், இதழாசிரியர்

**பணிகள்:**

1923 ஆம் ஆண்டில் திருநெல்வேலியில் வழக்கறிஞராகப் பதிவுசெய்துகொண்டு பணியாற்றத் தொடங்கினார். நெல்லையில் வழக்குரைஞர் தொழிலை மேற்கொண்ட சேதுப்பிள்ளை, நகர்மன்ற உறுப்பினராகவும், நகர்மன்றத்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

வழக்குரைஞராக இருப்பினும் தமிழ்மொழியின் மீது மிகுந்த பற்றுக்கொண்டிருந்தார். இவரின் செந்தமிழ்த்திறம் அறிந்த அண்ணாமலைப்பல்கலைக்கழகம் இவரைத் தமிழ் அறிஞராக ஏற்றுக்கொண்டு தமிழ்த்துறையில் தமிழ்ப் பேரறிஞர் பதவியை அளித்தது. சேதுப்பிள்ளை தமிழ்த்துறையில் விரிவுரையாளராகச் சேர்ந்து விபுலானந்தர்,சோமசுந்தர பாரதியார் ஆகிய இரு பெரும் புலவர்களின் தலைமையில் தொடர்ந்து ஆறாண்டுகள் பணிபுரிந்தார்.

1936-இல் சென்னைப் பல்கலைக்கழகம் சேதுப்பிள்ளையைத் தமிழ்ப்பேராசிரியராக அமர்த்தியது. 25 ஆண்டுக் காலம் சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பணியாற்றினார். அந்நாளில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சித் துறைத் தலைவராகப் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை பணியாற்றி வந்தார். வையாபுரிப்பிள்ளையின் ஓய்வுக்குப்பின் இவர் தலைமைப்பதவியை ஏற்றார். இவரின் முயற்சியினால், திராவிடப் பொதுச்சொற்கள், திராவிடப் பொதுப்பழமொழிகள் ஆகிய இருநூல்களைச் சென்னைப்பல்கலைக்கழகம் வெளியிட்டது.


பேரா. எஸ். வையாபுரிப்பிள்ளை


## சொற்பொழிவுகள்:

பல்கலைக்கழகப்பணிகளை சிறப்பாகச் செய்த சேதுப்பிள்ளை, தமது செந்தமிழ்ப் பேச்சால் சென்னை மக்களை ஈர்த்தார். அவரின் அடுக்குமொழித்தமிழுக்கு உலகமெங்கும் அன்பான வரவேற்பும், ஆர்வம் மிகுந்த பாராட்டும் கிடைத்தன. சென்னை ஒய்.எம்.சி.ஏ. அரங்கத்தில் அவரது கம்பராமாயணச் சொற்பொழிவு மூன்றாண்டுகள் நடைபெற்றது. அச்சொற்பொழிவின் தாக்கத்தால் சென்னை மாநகரில் கம்பர்கழகம் நிறுவப்பட்டது. சென்னையிலுள்ள கோகலே மன்றத்தில் சிலப்பதிகார வகுப்பைத் தொடர்ந்து மூன்றாண்டுகள் நடத்தினார். தங்கச்சாலை தமிழ்மன்றத்தில் ஐந்தாண்டுகள் (வாரம்ஒருநாள்) திருக்குறள் விளக்கம் செய்தார். கந்தகோட்டத்து மண்டபத்தில் ஐந்தாண்டுகள் கந்தபுராண விரிவுரை நிகழ்த்தினார்.

## படைப்புகள்:

இரா.பி. சேதுப்பிள்ளையின் உரைநடைநூல்கள் 20-க்கும் மேற்பட்டு அடங்குவன. 14- கட்டுரை நூல்கள், 3- வாழ்க்கை வரலாற்று நூல்கள்,4-நூல்களை பதிப்பித்தார். சேதுப்பிள்ளையின் நூல்களுள் பலவும் அவர் தமிழக வானொலி நிலையங்களில் ஆற்றிய இலக்கியப்பொழிவுகளின் தொகுப்புக்களாகும்.

இவர் எழுதிய முதல் கட்டுரை நூல் "திருவள்ளுவர் நூல் நயம்"என்பதாகும். படைத்த உரைநடைநூல்களுள் தலைசிறந்ததாகவும் வாழ்க்கைப் பெருநூலாகவும் விளங்குவது, "தமிழகம் ஊரும் பேரும்" என்பதாகும். இந்நூல் அவரின் முதிர்ந்த ஆராய்ச்சிப் பெருநூலாகவும், ஒப்பற்ற ஆராய்ச்சிக் கருவூலமாகவும் திகழ்கிறது.



# 'சொல்லின்செல்வர்' இரா.பி.சேதுப்பிள்ளை

கட்டுரை

## சொல்லின் செல்வர் - சேதுப்பிள்ளை:

அடுக்குமொழி, எதுகை, மோனை, இலக்கியத்தொடர் மூன்றையும் உரைநடைக்குள் கொண்டு வந்த சேதுப்பிள்ளையின் பேச்சாற்றலைப் பாராட்டித் தருமபுர ஆதீனம் 1950ம்ஆண்டு 'சொல்லின்செல்வர்' என்னும் விருது வழங்கியது. இவர் தமிழுக்கு ஆற்றியபணிகளுக்காகச் சென்னைப் பல்கலைக்கழகம் 'முனைவர்' பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. மேலும்சென்னைப்பல்கலைக்கழகத்தில்கால்நூற்றாண்டுகாலம்பணியாற்றிய தைப்பாராட்டி "வெள்ளிவிழா" எடுத்தும், "இலக்கியப்பேரறிஞர்" என்ற பட்டம் அளித்தும் சிறப்பித்தது.

## நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள்




- ஆற்றங்கரையினிலே (நூல்)
- கடற்கரையினிலே (நூல்)
- கிருஸ்தவத் தமிழ்த்தொண்டர் (நூல்)
- தமிழ் விருந்து (நூல்)
- தமிழக ஊரும் பேரும் (நூல்)
- தமிழர் வீரம் (நூல்)
- தமிழின்பம் (சாகித்யஅக்காதமிபரிசுபரிசுபெற்றநூல)
- மேடைப்பேச்சு (நூல்)
- வேலின் வெற்றி (நூல்)

## மறைவு:

தமிழ் அறிஞர், எழுத்தாளர், வழக்கறிஞர், மேடைப்பேச்சாளர் என பன்முகம் கொண்ட பாவலர். தமிழ் வளர்ச்சிக்காகத் தமது இறுதிக்காலம் வரை பாடுபட்ட சொல்லின்செல்வர்ரா.பி. சேதுப்பிள்ளை 25.04.1961ல் 65 -ஆம் வயதில் மறைந்தார்.

நன்றி: தினமணி

நாளை நமதே

முடியாது என்று
நீ சொல்வதையெல்லாம்
யாரோ ஒருவன் எங்கோ
செய்துகொண்டிருக்கிறான்

அகர முதல இலக்கியப் பேரவை

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :
9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com